

பாமாலை 255 நான் தேவரீரை, கர்த்தரே

1. நான் தேவரீரை, கர்த்தரே
துதிப்பேன் அடியேன்,
எல்லாரின் முன்னும் உம்மையே
அறிக்கை பண்ணுவேன்.

2. ஆ எந்த மா பாக்யங்களும்
உம்மால்தான் வருமே;
உண்டான எந்த நன்மைக்கும்
ஊற்றானவர் நீரே.

3. உண்டான நன்மை யாவையும்
நீ தந்தீர், கர்த்தரே;
உம்மாலொழிய எதுவும்
உண்டாகக் கூடாதே.

4. நீர் வானத்தை உண்டாக்கின
கர்த்தா, புவிக்கு நீர்
கனிகளைக் கொடுக்கிற
பலத்தையும் தந்தீர்.

5. குளிர்ச்சிக்கு மறைவையும்
ஈவீர்; எங்களுக்கு
புசிக்கிறதற் கப்பமும்
உம்மால் உண்டானது.

6. இக்கட்டில் நாங்கள் கூப்பிட்டால்,
நீர் கேட்டிரங்குவீர்,
எங்களை மாதயவினால்
ரட்சித்துத் தாங்குவீர்.